**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. No. 208/2007**

**Date :20.02.2026**

**பி.வா.சா.1 - சுப்பிரமணியன்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடரச்சி.**

வழக்குப் பட்டிகை சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 106/11. வழக்கு பட்டிகை சொத்தின் மொத்த விஸ்திரனம் என்ன என்றால் 20 சென்ட். வழக்குப் பட்டிகை சொத்தின் வடக்கு பக்கம் யாருடைய சொத்து என்றால் வயல் வழக்கு பட்டிகை சொத்தின் வடக்கே இருக்கும் வயல் மொத்தம் 23 சென்ட் மேற்படி 23 சென்ட்டை வாதி மற்றும் அவருடைய குடும்பத்தார்கள் வேலாயுதம் பிள்ளை நல்ல பெருமாள் பிள்ளை, பேச்சிநாதப்பிள்ளை சேர்ந்து குலசேகர புரம் ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் பெயருக்கு 26.04.2004 அன்று விலைக்கு வாங்கினார்கள் என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி மேற்படி 23 சென்ட்டை வாதி மற்றும் அவருடைய குடும்பத்தார்கள் வேலாயுதம் பிள்ளை நல்ல பெருமாள் பிள்ளை, பேச்சு நாதப்பிள்ளை சேர்ந்து குலசேகர புரம் ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் பெயரு க்கு 26.04.2004 அன்று விலைக்கு வாங்கின ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் கிரய எண் 1201/2004 வாசாஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

குலசேகரபுரம் நங்கை அம்மன் கோவில் ஊர் குலசேகரபுரம் ஊருக்குள்ளே

உள்ளது என்றால் சரிதான். மேற்படி கோவில் குலசேகரபுரம் ஊரில் இருக்கும் வெள்ளாளர் சமுதாயத்தற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 540 வரிகாரர்களுக்கு பாத்தியப்பட்டது.

வாதி மற்றும் அவரது குடும்பத்தார்கான வாதியின் அண்ணன் சித்தப்பா ஆகியோர்கள் குலசேகரபுரம் நங்கை அம்மன் கோவிலின் வரிகாரர்கள் என்றால் சரிதான். வாதி மேற்படிகுலசேகரபுரம் நங்கை அம்மன் கோவிலின் நிர்வாகத்தின் நிர்வாகிகளாக இருந்தார்கள் என்றால் சரிதான். வாதி வழக்கு தாக்கல் செய்த பின்பு ஊரிலிருந்து வாதியிடம் வரி வாங்கினோமா என்றால் அவரும் தரவில்லை. வழக்கு தாக்கல் செய்ததால் வாங்கவில்லை. கோவிலில் நங்கை அம்மன் கோவிலின் வாகனத்தை ஊரை சுற்றி வரும் போது ஒவ்வொரு வீட்டிலும் நின்று சுவாமிக்கு திருக்கன் சாற்றுவார்கள். அவ்வாறு வாதி திருக்கன் சாற்றும் சமயத்தில் நாங்கள் வாங்கவில்லை என்றால் சரியல்ல. வாதி குலசேகரபுரம் நங்கை அம்மன் கோவிலுக்கு தந்த வரியை நாங்கள் வாங்கிவிட்டு தற்போது வரையிலும் வரவு வைக்காமல் பணத்தை மோசடி செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. ஆற்றங்கரை சுடலை மாட சுவாமி கோவில் குலசேகரபுரம் ஊரிலிருந்து 1/2 கிலாமீட்டர் தள்ளி குளத்தன் கரை தள்ளி ஆற்றங்கரை பக்கம் உள்ளது என்றால் சரிதான்.

குலசேகரபுரம் சுடலை மாட சுவாமி கோவில் உள்ள இடம் அரசு புறம் போக்கு என்றால் சரியல்ல. எங்கள் நிர்வாகத்தின் பதவி காலம் இன்னும் எத்தனை வருடம் உள்ளது என்றால் சுமார் 2 ½ வருடங்கள். ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவிலில் பொருட்களை திருடிவிட்டதாக அஞ்சுகிராமம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துவிட்டு அதில் நானும் ஒரு குற்றவாளி என்றால் சரிதான். ஆனால் குற்றம் நிரூபிக்கப்படவில்லை. நாங்கள் குற்றவாளி இல்லை என்று கூறி எந்த நீதிமன்றமும்

தீர்ப்பளிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிராமாண வாக்குமூலத்தில் மேற்படி தீர்ப்பில் நாங்கள் பொருட்களை திருடவில்லை என்று கூறி நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். நான் எந்த பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை என்னுடைய எதிர் வழக்குரையாக ஏற்றுக் கொள்ள வேண்டி Memo கொடுத்துள்ளேன் என்றால் சுடலையாண்டி பிள்ளை.

சுடலையாண்டி போட்ட எதிர் உறையை என்னுடைய எதிர் உறையாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் Memo தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சுடலையாண்டிபிள்ளை இவ்வழக்கில் எதிர் உறை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 29.10.2007 ல் தாக்கல் செய்துள்ள வழக்கில் எதிர் உறையின் பக்கம் 4 ல் வழக்கு பட்டிகை சொத்தின் வாதி குத்தகைதாரர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் எனது தரப்பு மொத்தம் 21 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 21 ஆவணங்களை குறித்து நான் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக கூறிய எதிர் உறையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள பிராமாண வாக்குமூலத்தில் மேற்படி 21 ஆவணங்களை பற்றி கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள 21 ஆவணங்களை குறித்து நான் எதிர் வழக்குரையில் நான் குறிப்பிடாததால் மேற்படி ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி 21 ஆவணங்களும் சட்டத்தின் முன் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பட்டாவில் சர்வே எண் 263/1 ல் குலசேகர நங்கை அம்மன் Trust ன் தற்கால காப்பாளர் சரவணப் பெருமாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் 263/1 கொண்ட

சொத்து யார் கைவசம் உள்ளது என்றால் எங்கள் Trust ன் கைவசம் உள்ளது. மேற்படி சர்வே எண்ணில் உள்ள சொத்து என்ன சொத்து என்றால் வயல் . வழக்குப் பட்டிகை சொத்து குலசேகர நங்கை அம்மன் கோவிலுக்கு உரிமைப்பட்டதாக ஏதேனும் உரிமை ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா தாக்கல் செய்துள்ளேன்.

நான் தாக்கல் செய்துள்ள பிராமாண வாக்குமூலத்தில் குத்தகையானது பிரதிவாதிகளின் அறக்கட்டளையின் கூட்டத்தில் ஏலம் கோறப்பட்டு மேற்படி ஏலத்தில் குத்தகைதாரரை நிர்ணயம் செய்து கொடுக்கப்பட்ட ஒரு வாய்மொழி குத்தகை என்று குறிப்பிட்டுள்ளேன். மேற்படி விவரத்தை எதிர் வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வாதியின் தந்தை வாய் மொழியாக குத்தகைக்கு எடுத்தப்பின்பு அவரை பாட்டத்தில் சேர்த்ததற்கான ஆவணங்கள் Trust ல் உள்ளதா என்றால் உள்ளது.

நீதிமன்றத்தில் தற்போது வரையிலும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கை குறித்து எந்த விவரமும் தெரியாமல் நான் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கல் 1 முதல் 5 பிரதிவாதிகள் வழக்கு பட்டிகை சொத்து குலசேகரபுரம் நங்கை அம்மன் கோவிலுக்கு உரியது என்று தவறாக புரிந்து கொண்டு வழுக்கட்டாயமாக காலி செய்ய வந்ததால் வாதி மேற்படிபிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சரியல்ல. வாதி வழக்கு பட்டிகை சொத்திற்கு நாளது தேதி வரை குலசேகர புரம் ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் வழிபாட்டுக் குழு பரம்பரை Trust க்கு அனைத்து பாட்டங்களும் செலுத்தி அதன் ரசீதுகளை வாதி தரப்பில் சான்றாவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அது வாதியால் தயார் செய்யப்பட்டது. மேற்படி ரசீதுகள் வாதியால் தயார் செய்யப்பட்டது என்று எனது முதல் விசாரணையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு விசாரணைக்கு

வருங் சமயத்தில் குலசேகரபுரம் நங்கை அம்மன் கோவிலின் நிர்வாகம் மாறி உள்ளதாக கூறி வழக்கில் மனுக்கள் தாக்கல் செய்து வாதியை பல வழியிலும் கஷ்டப்படுத்தியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. குலசேகரபுரம் ஆற்றங்கரை சுடலை மாட சுவாமி கோவில் வாதியின் 25 குடும்பத்தார்களுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. குலசேகரபுரம் ஆற்றங்கரை சுடலை மாட சுவாமி கோவில் வாதியின் 25 குடும்பத்தார்களுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்று குலசேகரபுரம் நங்கை அம்மன் கோவிலின் நிர்வாகத்திற்கு தெரிந்ததால் தான் 02.07.2007 ல்குலசேகர புரம் ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் வழிபாட்டுக் குழு பரம்பரை Trust பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை கேள்வி கேட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி 02.07.2007 ல்குலசேகர புரம் ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் வழிபாட்டுக் குழு பரம்பரை Trust பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை இனிமேல் கேள்வி கேட்டு வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்து மேற்படி ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் வழிபாட்டுக் குழு பரம்பரை Trust க்கு உரிமைப்பட்டது என்ற விவரம் தெரிந்தும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**